வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவண குமார்

தேதி-16.7.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நீடித்த வளர்ச்சிக்கான உலக இலக்குகளை எட்டும் முயற்சிகளில், இந்தியா முக்கிய பங்களித்து வருவதாக, நிதி ஆயோக் துணைத் தலைவர் திரு சுமன் பேரி கூறி உள்ளார்.

வேளாண் விஞ்ஞானிகள், விவசாயிகளுடன் நேரடி தொடர்புகளைப் பராமரித்து, மகசூலை பெருக்க வேண்டும் என, மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் கூறி உள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர், இஸ்லாமிய சமூகத்தினர் உட்பட அனைவருக்கும், மொஹரம் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

வரும் ஆகஸ்டு மாதம் புதுச்சேரி கலை விழாவை சிறப்பான முறையில் நடத்துவது குறித்து, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

சுமன் பேரி

நீடித்த வளர்ச்சிக்கான உலக இலக்குகளை எட்டும் முயற்சிகளில் இந்தியா முக்கிய பங்களித்து வருவதாக, நிதி ஆயோக் துணைத் தலைவர் திரு சுமன் பேரி கூறி உள்ளார். ஐ நா மன்றத்தின் உயர்நிலை அரசியல் பேரவைக் கூட்டத்தில் இந்தியாவின் தேசிய அறிக்கையை அவர் வெளியிட்டுப் பேசுகையில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை முழுமையாக எட்ட இந்தியா உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்தார். டிஜிட்டல் பொது வசதிகளை மக்களுக்கு வழங்குவதிலும், அனைத்து துறைகளில் பெண்களின் பங்கேற்பை மேம்படுத்துவதிலும் இந்தியா வெற்றிகரமான முறையில் செயல்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். வளர்ச்சி

குறைவாக உள்ள பகுதிகளில் திட்டப் பலன்கள் முழுமையாக சென்று சேர்வதை உறுதிப்படுத்துவதில் அரசு முக்கிய கவனம் செலுத்தி வருவதாகவும், பேரிடர் சம்பவங்களை சமாளிக்கத் தேவையான தயார் நிலை. முற்றிலும் வலுவாக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இந்தியாவில் ஏற்கனவே 135 மில்லியன் மக்கள் பல பரிமாண வறுமையில் இருந்து மீட்கப் பட்டுள்ளதாகவும், பல பரிமாண வறுமைக் குறியீட்டில், 1.2 என்னும் இலக்கை, திட்டமிட்ட காலக் கெடுவான 2030-ஆம் ஆண்டிற்கு உள்ளாகவே, இந்தியா எட்டும் என்றும் திரு சுமன் பேரி தெரிவித்தார். உலக அளவில் தனிநபர் கார்பன் புகை உமிழ்வு குறைவாக உள்ள நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கின்ற நிலையிலும், நாட்டில் கார்பன் புகை வெளியீட்டைக் குறைக்கும் வகையிலான புதுபிக்க வல்ல எரிசக்தி ஆதாரங்களின்

பயன்பாட்டில், பெருமளவில் முதலீடு செய்யப்படுவதாக அவர் மேலும் கூறினார்.

*ஜெய்சங்கர் (16)*

2 நாள் பயணமாக மொரீசியஸ் சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று போர்ட் லூயிசில், மொரீசியஸ் பிரதமர் திரு பிரவிந்த் ஜக்நாத்தை சந்தித்துப் பேசினார். திரு ஜக்நாத்திற்கு, பிரதமர் திரு நரேந்திர மோடியின் வாழ்த்துக்களை அவர் தெரிவித்துக் கொண்டார். இருநாடுகளுக்கும் இடையிலான சிறப்பு உறவுகள் மேலும் விரிவடைந்து வருவது குறித்து இரு தலைவர்களும் மகிழ்ச்சி வெளியிட்டனர். மொரீசியஸ்சில் இந்திய உதவியுடன் மேற்கொள்ளப்படும், உயர் தாக்கமுள்ள 12 சமூக மேம்பாட்டு திட்டங்களை இருதலைவர்களும் இணைந்து தொடக்கி வைத்தனர். விண்வெளி ஒத்துழைப்பு உட்பட பல்வேறு துறைகள் தொடர்பான உடன்பாடுகளின் பரிமாற்றத்தையும் இவர்கள் பார்வையிட்டனர்.7-ஆம்

தலைமுறை மொரீசியஸ் குடிமக்களுக்கு, கடல் கடந்து வாழும் இந்தியர் அந்தஸ்துக்கான ஓசிஐ அட்டைகளை வெளியுறவு அமைச்சர் வழங்கினார். மொரீசியஸ் நாட்டில், அமைச்சர்கள் மற்றும் இதர முக்கிய தலைவர்களையும் டாக்டர் ஜெய்சங்கர் சந்திக்கிறார். அண்டை நாடுகளுக்கு முதலிடம் அளிப்பதான இந்தியாவின் கொள்கையிலும், பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான இந்தியாவின் சாகர் திட்டத்திலும், தெற்குலக நாடுகளின் குரலாக செயல்படுவதில் இந்தியாவிற்கு உள்ள உறுதிப்பாட்டிலும், இந்தியா-மொரீசியஸ் உறவுகளுக்கு முக்கிய இடம் இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

*ராஜ்நாத்*

ஜம்மு-காஷ்மீரின் தோடாப் பகுதியில் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையின் போது, துணிச்சல் மிகுந்த பாதுகாப்பு படை வீரர்கள் உயிரிழக்க நேர்ந்தது குறித்து பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் துயரம்

வெளியிட்டுள்ளார். நாட்டிற்கான கடமையின் போது உயிர் தியாகம் செய்த பாதுகாப்பு படையினரின் குடும்பத்திற்கு நாடே துணை நிற்பதாக சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாகவும் பிராந்தியத்தில் தீவிரவாதத்தை ஒழித்து, அமைதியை மீட்க பாதுகாப்பு படையினர் உறுதி பூண்டுள்ளதாகவும் அவர் கூறி உள்ளார். தலைமை ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதியும் உயிர் தியாகம் செய்த ராணுவ வீரர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார். தோடா மாவட்டத்தில் நேற்று இரவு தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில், ராணுவ அதிகாரி ஒருவர் உட்பட பாதுகாப்பு படையினர் நால்வர் உயிர் இழந்தனர்.

*பாதுகாப்பு-உற்பத்தி*

பாதுகாப்பு உற்பத்தி துறையில் இறக்குமதியை குறைத்து, சுய சார்பை அதிகரிக்கும் வகையில், உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யத் தகுந்த ராணுவ தளவாடங்கள், ஆயுதங்கள் மட்டும் உதிரி பாகங்களின் 5-ஆவது பட்டியலை, மத்திய அரசு இன்று, அரசிதழில் வெளியிட்டுள்ளது. இனி இப்பொருட்கள் உள்நாட்டு உற்பத்தியாளர்களிடம் இருந்தே வாங்கப்படும் என்றும், இதனால் சுமார் ஆயிரம் கோடி ரூபாய் வரை இறக்குமதி குறையும் என்றும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் பாதுகாப்பு துறைக்குத் தேவையான சுமார் 12 ஆயிரத்து 300 பொருட்களின் உற்பத்தி, முற்றிலும் உள்ளூர் மயமாக்கப் பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பொது துறை நிறுவனங்கள் சுமார் 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் உள்நாட்டு நிறுவனங்களிடம் இருந்து

இப்பொருட்களை வாங்கி இருப்பதாகவும், அமைச்சகம் கூறி உள்ளது.

*வேளாண் அமைச்சர்*

வேளாண் விஞ்ஞானிகள், விவசாயிகளுடன் நேரடி தொடர்புகளைப் பராமரித்து மகசூலை பெருக்க வேண்டும் என்று, மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் 96-ஆவது நிறுவன நாள் விழாவை தொடக்கி வைத்துப் பேசிய அவர், விவசாயிகளின் வருமானத்தை பெருக்குவது உள்ளிட்ட அரசின் இலக்குகளை எட்டுவதில் வேளாண் விஞ்ஞானிகள், பல்கலைக் கழகங்கள், மற்றும் கல்லூரிகள் முதல், வேளாண் அறிவியல் மையங்கள் வரை உள்ள எல்லா தரப்பினரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்றார். இன்றும் கூட நாட்டின் சரிபாதி மக்கள் விவசாயத்தையே நம்பி இருப்பதாகவும், வேளாண் துறைக்கு அரசு முன்னுரிமை

அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார். இந்தியா உணவு தானிய உற்பத்தியில் சுயசார்பு நாடாக திகழ்வதற்கு அப்பாற்பட்டு, மீன்வளம் மற்றும் பால் உற்பத்தியிலும், இதுவரை இல்லாத அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக அமைச்சர் கூறினார். பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியிலும், சுயசார்பு நாடாக இந்தியாவை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். மகசூல் குறையாத விதத்தில் இயற்கை விவசாயம் செய்வது எப்படி என்பதில், விஞ்ஞானிகள் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

*மொஹரம்-வாழ்த்து*

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் இஸ்லாமிய சமூகத்தினர் உட்பட அனைவருக்கும், மொஹரம் வாழ்த்து தெரிவித்துக் கொண்டுள்ளனர். அன்பு, அமைதி மற்றும் சகோதர உணர்வுடன்

அனைவரும் வாழ்வதற்கான நம்பிக்கையை வழங்குவதாகவும், நபிகள் நாயகத்தின் போதனைகளால் அனைவர் வாழ்விலும் அருளும் மகிழ்ச்சியும் செழிப்பதற்கான புதிய தொடக்கமாகவும், இந்நாள் அமையட்டும் என்று துணை நிலை திரு சிபி ராதாகிருஷ்ணன், வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார். முதலமைச்சர் திரு ரங்கசாமி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் நபிகள் நாயகத்தின் போதனைகள் வாழ்க்கைக்கு சரியான பாதை காட்டுவது போல, அருள் நிறைந்த மொஹரம் திருநாளும் புதிய நம்பிக்கைகளுக்கான தொடக்கத்தை காட்டுவதாக அமையட்டும் என்று கூறி உள்ளார்.

*கலை விழா*

புதுச்சேரியில் கலை-பண்பாட்டுத் துறை மூலமான புதுச்சேரி கலை விழாவை, இவ்வாண்டும் வரும் ஆகஸ்டு மாதம் சிறப்பான முறையில் நடத்துவது குறித்து, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று ஆலோசனைக்

கூட்டம் நடத்தினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர் திரு நாரா சைதன்யா, காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி லட்சுமி சௌஜன்யா, சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ஸ்ரீராமுலு, செய்தி-விளம்பரத் துறை இயக்குநர் திரு தமிழ்ச் செல்வன், சுற்றுலாத் துறை இயக்குநர் திரு முரளிதரன் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். கலை-பண்பாட்டுத் துறை இயக்குநர் திரு கலியப் பெருமாள் இக்கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

*ஆட்சியர்-ஆய்வு*

புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் இன்று தவளக்குப்பம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நேரடி ஆய்வு மேற்கொண்டார். ஆசிரியர்களின் வருகைப் பதிவேட்டை அவர் பார்வையிட்டு, உரிய நேரத்தில் வராதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க, பள்ளி

முதல்வருக்கு உத்தரவிட்டார். பள்ளியில் உள்ள ஆய்வுக் கூடங்களில் உரிய உபகரணங்கள் உள்ளதா என்பதை அவர் ஆராய்ந்தார். பின்னர் வகுப்பறைகளுக்குச் சென்று மாணவர்களுடன் உரையாற்றிய மாவட்ட ஆட்சியர், மாணவர்களின் கோரிக்கைப் படி, நீட் தேர்வுக்கான பாடக் குறிப்புகளை தமிழில் வழங்க நடவடிக்கை எடுப்பதாக கூறினார். தொடர்ந்து, பள்ளியில் தற்போது நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்கவும் அவர் உத்தரவிட்டார்.

உ.பி வெள்ளம்

உத்தரபிரதேசத்தில் 17 மாவட்டங்களுக்கு உட்பட்ட சுமார் ஆயிரத்து 500 கிராமங்கள், கனமழை மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. பரேலி, பிலிபித், ஷாஜகான்பூர் உள்ளிட்ட நகரப் பகுதிகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. முதலமைச்சர் யோகி ஆதித்ய நாத் இன்று நிலவரங்களை மறு ஆய்வு செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையா உதவிகளை, 24

மணி நேரத்திற்குள் வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். பயிர் மற்றும் இதர சொத்துக்களை இழந்தவர்களுக்கு உடனுக்குடன் நிதி உதவி வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இதற்கிடையே, கோவா, குஜராத், மத்திய மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் கேரளாவில், அடுத்த 4 நாட்களுக்கு கனமழை முதல் மிக கனமழை பெய்யக் கூடும் என இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. தெலங்கானா. கடலோர ஆந்திரப் பிரதேசம், மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், ஒடிசா. வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் தமிழகத்தில் கனமழை இருக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சென்னை வானிலை ஆய்வு மையம் இன்று வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில், மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய வடமேற்கு வங்க கடல் பகுதிகளில், வரும் 19-ஆம் தேதி வாக்கில், புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக கூடும் என

தெரிவிக்கப் பட்டுள்ளது. மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் அதிகனமழையும், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் மிககனமழையும் திருப்பூர், தேனி, தென்காசி, நெல்லை மாவட்டப் மலைப் பகுதிகள் மற்றும் குமரி மாவட்டத்தில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

*முர்மு-நீதிபதி*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று, நீதிபதி திரு கோடீஸ்வர் சிங், நீதிபதி திரு ஆர் மகாதேவன் ஆகியோரை, உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமித்துள்ளார். தற்போது நீதிபதி திரு கோடீஸ்வர் சிங், ஜம்மு-காஷ்மீர், மற்றும் லடாக் உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாகவும் நீதிபதி திரு ஆர் மகாதேவன், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவராகவும்

பதவி வகித்து வருகின்றனர். உச்சநீதிமன்றத்திற்கான இவர்களின் நியமனம், இவர்கள் பதவி ஏற்கும் நாளில் இருந்து அமலுக்கு வரும் என்று மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*சாட்சியம்*

அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் அனைத்து காவல் நிலையங்களும், சாட்சியங்களை மின்னணு முறையில் விசாரிப்பதற்கான தனி இடமாக, காவல் நிலையம் அல்லது அதன் கட்டுப்பாட்டில் உள்ள எந்த இடத்தையும், அறிவிக்க கூடாது என்று மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது. இதுகுறித்து மத்திய உள்துறை செயலர் திரு ஏகே பல்லா அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலருக்கு கடிதம் எழுதி உள்ளார். அண்மையில் அமலுக்கு வந்துள்ள 3 குற்றவியல் சட்டங்களில் ஒன்றான பாரதீய நாகரிக் suraksha சம்ஹிதாவின் கீழ் மின்னணு முறையில் சாட்சியங்களை

விசாரிக்க தனி இடம் ஒன்றை இனம் காணுமாறு, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் அனைத்து காவல் நிலையங்களுக்கும் மத்திய அரசு ஏற்கனவே அறிவுறுத்தி இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

---------------------------------------

நீடித்த வளர்ச்சிக்கான உலக இலக்குகளை எட்டும் முயற்சிகளில், இந்தியா முக்கிய பங்களித்து வருவதாக, நிதி ஆயோக் துணைத் தலைவர் திரு சுமன் பேரி கூறி உள்ளார்.

வேளாண் விஞ்ஞானிகள், விவசாயிகளுடன் நேரடி தொடர்புகளைப் பராமரித்து, மகசூலை பெருக்க வேண்டும் என, மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் கூறி உள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர், இஸ்லாமிய சமூகத்தினர் உட்பட அனைவருக்கும், மொஹரம் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

வரும் ஆகஸ்டு மாதம் புதுச்சேரி கலை விழாவை சிறப்பான முறையில் நடத்துவது குறித்து, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.